**தலைப்பு 122 - ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி தொடக்கம் ஒவ்வொரு தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 210 | அரசாங்க தகவல் திணைக்களம் |
| 211 | அரசாங்க அச்சக திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை பின்வரும் திகதிகளில் திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 122 | ஊடக மற்றும் தகவல் அமைச்சு | 2015 ஜுலை 30 |
| 210 | அரசாங்க தகவல் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 11 |
| 211 | அரசாங்க அச்சகத் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 11 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்குகள் வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான 02 திணைக்களங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 3,417.0 மில்லியனாகும். இதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 3,136.9 மில்லியன் பயன்படுத்துதப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய நிதியேற்பாட்டில் சேமிப்புகள் முறையே ரூபா 8.4 மில்லியனிலிருந்து ரூபா 234.8 மில்லியன் வரையிலானதுடன் அதாவது தேறிய ஏற்பாடுகளுக்கு 1.92 சதவீதம் முதல் 18.30 சதவீதம் வரையில் காணப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 122 | 1,283.1 | 1,048.3 | 234.8 | 18.30 |
| 210 | 214.7 | 206.3 | 8.4 | 3.91 |
| 211 | 1.919.2 | 1.882.3 | 36.9 | 1.92 |
| மொத்தம் | 3,417.0 | 3,136.9 | 280.1 | 8.20 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள அரசாங்க அச்சகத் திணைக்களத்தால் 20-03-02-05 வருமானக் குறியீட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டிற்கென ரூபா 465 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின்போது அவ்வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 464.14 மில்லியன் வருமானமாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 99 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 02 திணைக்களங்களது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் பின்வருமாறு.

| விடய இல | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12201 | 6.0 | 5.9 | 3.2 | 3.6 | 22.0 | 14.9 |
| 21001 | 8.5 | 5.4 | 6.0 | 6.7 | 40.0 | 26.9 |
| 21101 | 52.0 | 37.7 | 44.0 | 44.8 | 300.0 | 215.92 |

## 2.4 கட்டு நிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 5.97 மில்லியனாகும். விபரம் பின்வருமாறு.

| அமைச்சு/திணைக்களம் | கட்டு நிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| ஊடக மற்றும் தகவல் அமைச்சு | 7002/0000/00/0143/0014 | 5.01 |
| அரசாங்க தகவல் திணைக்களம் | 7002/0000/00/0246/0014 | 0.03 |
| அரசாங்க அச்சகத் திணைக்களம் | 7002/0000/00/0104/0014 | 0.93 |
| மொத்தம் | | 5.97 |

## 2.5 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 284.74 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறு.

| அமைச்சு/திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| ஊடக மற்றும் தகவல் அமைச்சு | 6000/0000/00/0015/0035 | 107.89 |
| அரசாங்க தகவல் திணைக்களம் | 6000/0000/00/0015/0092 | 11.68 |
| அரசாங்க அச்சகத் திணைக்களம் | 6000/0000/00/0015/0093 | 164.18 |
| | 6000/0000/00/0002/0004 | 0.99 |
| மொத்தம் | | 284.74 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகளின் பிரகாரம் ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சினதும் அதன் கீழுள்ள திணைக்களங்களது ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படும் அவதானிப்புகளுக்குட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கிய முக்கியமானதுமான அவதானிப்புகள் 3 முதல் 5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 122 - ஊடக மற்றும் தகவல் அமைச்சு

### 3.1 பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகளைப் பேணாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| கணனிகள், துணைப் | 2002 நவெம்பர் 28 ஆந் | பேணப்படவில்லை |

| | | |
|---|---|---|
| பாகங்கள், மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | |
| ஆளுக்குரிய வேதனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | பேணப்படவில்லை. |
| உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்படவில்லை |
| பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை |
| மேலதிக எரிபொருள் பதிவேடு | 2008 ஜுன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | பேணப்படவில்லை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. |
| பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) | நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை |
| இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. |

### 3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ரன்மினிதென்ன டெலிசினிமாப் பூங்காவில் அடிப்படை வசதிகளை அமைப்பதற்கான ஒப்பந்தக் கோவை போன்ற தேவையான சான்றுகள் அமைச்சில் இல்லாமையால் ரூபா 20,273,612 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கலைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்**

-----------------------------------------------------------------------------------

அமைச்சிற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படாததுடன், அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 62,581,562 ஆகும்.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

-----------------------------------

**பாதீட்டு முரண்**

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடாகிய ரூபா 300,000 சேமிப்புக்குள்ளாகியது.

(ஆ) பதினேழு செலவின விடயங்களுக்கு ரூபா 218,677,569 மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னரான மிகை அச்செலவின விடயங்களுக்குரிய நிகர நிதியேற்பாட்டில் 29 சதவீததத்திற்கும் 79 சதவீதத்துக்கும் இடைப்பட்டிருந்தன.

**3.5 கட்டு நிதிக் கணக்கு**

---------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டு நிதிக் கணக்கு ஒன்றிலிருந்த ரூபா 3,448,812 மீதியை அமைச்சினால் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் தீர்க்கப்பட்டிருந்திருக்கவில்லை.

**3.6 பொது வைப்புக் கணக்கு**

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 215(3) ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டில் செலவினக் கணக்கில் வரவு வைத்த ரூபா 1,426,529 கூட்டுத் தொகையை அமைச்சு பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றியிருந்தது. அவ்வைப்புத் தொகை 2014 திசெம்பர் 31 ஆந்

திகதியளவிலும் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஒக்டோபர் 23 ஆந் திகதிய பீடீ/356/280/3/எஸ் இலக்க நிதி அமைச்சின் செயலாளரது கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் என்பவற்றிற்கு அறவிடப்படும் வரி வருமானமானது நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஒன்று நிறுவப்படும் வரை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட வேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அறவிடப்பட்ட மொத்த வரியாகிய ரூபா 134,297,000 இல் ரூபா 106,210,093 மீளாய்வாண்டு இறுதியிலும் முதலீடு செய்யப்படாது பொது வைப்புக் கணக்கிலிருந்தது.

## 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

---

விடய இலக்கம் 12201, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 272,208 ஆகும். அந்நிலுவை மீதிகளுள் ரூபா 124,654 தொகை 1 முதல் 5 ஆண்டுகளாக நிலவி வந்த போதிலும் அந்நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

## 3.8 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

மீளாய்வாண்டின் போது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் அலகினால் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 12 நிறுவனங்கள் சம்பந்தமாக 155 கணக்காய்வு ஐயவினாக்களும் தகவல்களைக் கோரல் வழங்கப்பட்டிருந்த போதும், அவற்றின் பொருட்டுப் பெறப்பட்ட பதில்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 சொத்து முகாமைத்துவம்**

---

அமைச்சினது சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

அமைச்சின் 02 வாகனங்கள் ஏறக்குறைய ஓராண்டாகப் பயன்படுத்தப்படாதிருந்தன. மீளாய்வாண்டின் போது ரன்மினிதென்னயைப் பார்வையிடச் செல்வோரது போக்குவரத்திற்கு ரூபா 3,134,000 செலவிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருந்த 02 Goft cart வருமானத்தை ஈட்டாது ரன்மினிதென்ன பூங்காவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) வருடாந்தப் பொருட்கணிப்பை மேற்கொள்ளுதல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வறிக்கைகளை 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அமைச்சு கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. இறுதியாக வருடாந்தப் பொருட் கணிப்பு 2013 ஆம் ஆண்டின் பொருட்டே நடாத்தப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்புச் சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட மேலதிகம், குறைவுகள் மற்றும் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) பெற வேண்டிய மீதி

---

2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கிணங்க 02 தொலைக்காட்சி அலைவரிசைகள் சம்பந்தமாக இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் வணிக நிகழ்ச்சிகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந்

திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த வரி வருமானமாகிய ரூபா 32,099,978 ஆறு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாகவிருந்தன.

**3.10 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ) | 1,380,942 | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் ஏற்பட்ட 04 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 177 | - | ரன்மிஹிதென்ன தொலைக்காட்சித் திரைப்படப் பூங்காவில் பிரவேசச் சீட்டுக்கள் விற்பனை மூலம் நாளொன்றிற்குச் சராசரியாக ரூபா 100,000 பெறப்பட்டபோதும், அவை 02 முதல் 05 நாட்கள் வரை வங்கியில் இடப்படாது வைக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை | | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவினம் தொடர்பான சுற்றறிக்கை | - | சுற்றறிக்கைப் பிரகாரம் அமைச்சருக்குரிய 03 வாகனங்களுக்குப் புறம்பாக அமைச்சின் 07 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

---------------------------------------------------

| | | |
|---|---|---|
| 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி மற்றும் 2008 ஜுன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | 205,142 | அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் புறம்பாக வாகனக் குழாமில் உள்ள 02 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

---------------------------------------------------

| | | |
|---|---|---|
| 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | ரன்மிஹிதென்ன ஒருங்கிணைப்பாளருக்கு அங்கீகாரமின்றி ரூபா 2,000 படியாக 2011 மார்ச் தொடக்கம் தொடர்ச்சியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

**3.11 செயலாற்றல்**

**---------------------------**

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) அமைச்சினால் சில பிரதான பணிகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் திரைப்படங்கள் என்பவற்றிற்கு தொழில்நுட்பத்தை அறிமுகஞ் செய்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) ரன்மிஹிதென்ன தேசிய தொலைக்காட்சித் திரைப்படப் பூங்கா மன்ற அதிகாரச் சட்டத்தை அமுலாக்கவில்லை.

(iii) ஊடகத்துறை அமைச்சின் அடிப்படை நோக்கமான பொது மக்களுக்குப் பாதுகாப்பு, பொருளாதாரம் தொடர்பான உண்மையான தகவல்களை அவர்கள் இலகுவாகப் பெறக்கூடிய உரிமையை உறுதி

செய்தற்கான வரைவுச் சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனைச் சட்டரீதியானதாக ஆக்கவில்லை.

(iv) தேசிய ஊடகக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் தொலைக்காட்சி விளம்பரக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை.

(v) வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளைப் பேணுவதற்கான நிரந்தர அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் அல்லது அவற்றைப் புதுப்பிப்பதற்கான நடைமுறைகளைத் தயாரித்தலும் அவற்றை மேற்பார்வையிடலும்.

(ஆ) ரன்மிஹிதென்ன தொலைக்காட்சி திரைப்படக் கிராமத்தில் ஒளிப்பதிவு செய்வதற்கென அங்கு சமுகமளிப்பவர்களுக்கு அறை வசதிகளைச் செய்வதற்கு ஏ, பீ, சீ என மூவகைத் தரங்களிலான அறைகளின் கீழ் 43 அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது, அவற்றின் பயன்பாடு நூற்றுக்கு 20, 22, 61 சதவீதங்களாகும். அவற்றில் பெருமளவு கட்டணமின்றி வசதிகள் வழங்கப்பட்ட இந்திய திரைப்பட தயாரிப்புகளுக்கானவையாகும். மேலும், திரைப்படங்களும் தொலைக்காட்சி நாடகங்களுக்குமான திரைக்கூடம் நிறுவப்பட்டிருந்த போதும், அவற்றின் மூலம் 2014 ஆம் ஆண்டில் வருமானம் எதுவும் ஈட்டப்படவில்லை.

(இ) இளைஞர்களையும் யுவதிகளையும் உள்ளடக்கிய 161 பேர் அடங்கிய கலைஞர் குழாம் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அக்கலைஞர்கள் பங்குபற்றிய 2 செயலமர்வுகள் ரூபா 1,124,044 செலவில் நடைபெற்றிருந்தன. எனினும், அவர்கள் எதுவித ஆக்கங்களுக்கும் உதவியாக இருக்கவில்லை.

(ஈ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், முடிவுறுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருந்த பின்வரும் விடயங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(i) வானொலி மற்றும் தொலைக்காட்சி அலை வரிசைகளுக்கு ஊடகத் துறை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) செலசினே நிறுவனம் அரச நிறுவனமாக நிறுவப்படவில்லை.

(iii) பார்வையாளர்களை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு நடாத்தப்படவில்லை.

(iv) சமூக ஊடகத்துறைக் கூறு ஒன்று நிறுவப்படவில்லை.

(v) தேசிய ஒளிப்பரப்பு அதிகாரசபையை உருவாக்குதலும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தைத் திருத்துவதற்குமான நடவடிக்கையை மேற்கொள்ளுதலும் இடம்பெறவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பின்வரும் தகவல்கள் சரியானதல்ல அல்ல என அவதானிக்கப்பட்டன.

(i) ரன்மிஹிதென்ன வருமானம் தொடர்பாக பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) ரன்மிஹிதென்ன திரைப்படப் பூங்காவில் மீளாய்வாண்டின்போது ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(iii) 07 ஊடகத்துறை சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டபோதும், ஒரு சுற்றுலாவேனும் நடைபெறவில்லை.

(iv) இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களுக்குத் தொலைக்காட்சி அலைவரிசைகளிலிருந்து அறவீடு செய்யப்பட்ட வரி வருமானமாகிய ரூபா 807,000 பிற வருமானமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 3.12 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சு மேற்கொண்ட சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

2013 ஆம் ஆண்டின்போது ஏறக்குறைய 04 மாதகால அங்கீகரிக்கப்பட்ட விடுமுறையில் பிரத்தியேக சுற்றுலாவை மேற்கொண்ட அமைச்சர் நாடு திரும்பியதன் பின்னர் விடுமுறைக் காலத்திற்கும் மாதாந்த எரிபொருள் படியாக ரூபா 1,314,000 வழங்கப்பட்டிருந்தது.

### 3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு மேற்கொண்ட முறையற்ற கொடுக்கல் வாங்கல் பின்வருமாறு.

உத்தியோகபூர்வ வாகனத்திற்கென அமைச்சருக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படியுடன் சம்பளத்தையும் பெற்றிருக்கையில் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கு முரணாக 2014 ஆம் ஆண்டின்போது வாகனக்குழாமில் உள்ள வாகனம் ஒன்றிற்கென 5718 லீட்டர் டீசலுக்கு ரூபா 688,416 செலவிடப்பட்டிருந்தது.

### 3.14 இழப்புகளும் நட்டங்களும்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது புலனாகிய இழப்புகளும் நட்டங்களும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) வரி செலுத்தாது வெளிநாட்டு விளம்பரங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய வேண்டுமாயினும், அவ்வாறல்லாது, 2013 ஆம் ஆண்டின்போது மாதிரிச் செவ்வையின் மூலம் மாத்திரமே இனங்காணப்பட்ட அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 2,500,000 எனக் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. கணக்காய்வு ஐய வினாவிற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் 2014 ஆம் ஆண்டின்போது மாதிரிச் செவ்வை ஒன்றின் மூலம் புலனாகிய 06 வெளிநாட்டு வர்த்தக விளம்பரங்களில் மாத்திரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த இழப்பு ரூபா 3,000,000 ஆகும். அதற்கமைய, பெருமளவு வருமானமொன்று அரசு இழந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது ரன்மிஹிதென்ன தொலைக்காட்சித் திரைப்படக் கிராமத்தின் நுழைவுச்சீட்டு விற்பனை, ஒளிப்பதிவு செய்தல், அறை வசதிகளை வழங்குதல் மற்றும் பிற வருமானங்கள் என்பவற்றின் பெறப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 18,689,193 ஆகும். அது தொடர்பான பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினம் ரூபா 70,546,070 ஆகும். எனவே, ஆண்டிற்கான நட்டம் ரூபா 51,856,877 ஆகும். மேற்படி செலவினத்தில் ரூபா 46,623,393 பொம்பே வெல்வட் திரைப்படக் கலைஞர்களது தங்குமிட மற்றும் வானூர்திக் கட்டணம் என்பவற்றிற்கானவையாகும்.

**3.15 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

அமைச்சு தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக அமைச்சு திருத்தங்களை மேற்கொண்டிராத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறு.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | **ஆண்டு** | **பந்தி** | |
| (i) | 2012 | 8(ஆ)(ii) | மஹிந்த ராஜபக்ஷ தொலைக்காட்சித் திரைப்படப் பூங்காவுக்கென வேறாக ஒரு அதிகாரச் சட்டத்தை ஏற்படுத்தவதற்கு 2012 செயல் நடவடிக்கை திட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதும், 2015 ஜுலை 20 ஆந் திகதியளவிலும் அவ்வாறான அதிகாரச் சட்டம் உருவாக்கப்படவில்லை. |
| (ii) | 2012 | 12(அ) | ரன்மிஹிதென்னவுக்கு வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டுகளுக்கும் பெறப்பட்ட வருமானத்துக்குமிடையே ரூபா 99,305 குறைவு காணப்பட்டபோதும், 2015 ஜுலை 20 ஆந் திகதியளவிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை. |
| (iii) | 2012 | 12(ஐ) | 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கிருந்த ஊடகத்துறை மரபுக் கோவை 2015 ஜுலை 20 ஆந் திகதியளவிலும் நிறைவேற்றப்படவில்லை. |
| (iv) | 2012 | | வானொலி மற்றும் தொலைக்காட்சி அலை வரிசைகளை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது |

| | | | |
|---|---|---|---|
| | | | நிரந்தர அனுமதிப்பத்திரங்களுக்குப் பதிலாகத் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் நிரந்தர அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கோ அல்லது அவற்றைப் புதுப்பிப்பதற்கோ நடைமுறைகள் தயாரிக்கப்படவில்லை. அதன் காரணமாக, எதுவித மேற்பார்வையும் இல்லாது அலைவரிசைகளது ஒளிபரப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதுடன் பின்னர் வழங்கப்படும் தற்காலிக அனுமதிப்பத்திரங்களில் முன்னர் குறிப்பிடப்பட்டிராத நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிறுவனங்கள் தொடர்பாக ஒரே விதமான தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது உள்ளமையும் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் உருவாகி இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. |
| (v) | 2013 | 5.11(ஆ) | 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இலங்கையின் கலாசாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் நிகழ்ச்சிகளை இந்நாட்டில் ஒளிபரப்புவதற்கு வரி விதிக்கப்பட்டிருந்தது. 15 அனுமதிப்பத்திரங்களின் கீழ் செயற்பட்ட கேபள், செய்மதிகள், இணையதளம், தொலைபேசி என்பவற்றின் அடிப்படையிலான தொலைக்காட்சி அலைவரிசைகளினூடாக ஒளிபரப்பாகிய நிகழ்ச்சிகள் இவ்வரிக்கு உட்படவில்லை. இதன் காரணமாக, குறித்த வரி விதிப்பினது நோக்கம் இந்நாட்டில் நிறைவேறாதிருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும் இவ்வாறாகச் சேகரிக்கப்படும் வரி வருமானமானத்தைச் செலவு வைப்பதற்கென நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு 2009 |

ஆம் ஆண்டில் அரசாங்க நிதித் திணைக்களத்துடன் இணக்கம் ஏற்பட்டிருந்தபோதும், 2015 ஜுலை மாதமளவிலும் அது நடைபெறவில்லை.

(ஆ) அரசாங்கக் கணக்குக் குழுவின் அமைச்சு தொடர்பான 2014 சனவரி 22 ஆந் திகதிய கட்டளைகளில் 2015 ஜுலை 20 ஆந் திகதியளவிலும் நிறைவு பெறாதிருந்த கட்டளைகள் பின்வருமாறு.

| | அரசாங்க கணக்குக் குழுவின் அறிக்கையுடனான தொடர்பு | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| (i) | 05 | தொழில்நுட்ப ஊடகத்துறை தொடர்பாகவும் புகார் செய்யக்கூடியவாறாக இலங்கை புதினப் பத்திரிகை புகார் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தைத் திருத்தஞ் செய்தல் |
| (ii) | 06 | ஊடகத்துறை அமைச்சின் அடிப்படை நோக்கமான பொது மக்களுக்குப் பாதுகாப்பு, பொருளாதாரம் தொடர்பான உண்மையாக தகவல்களை இலகுவாகப் பெறும் உரிமையை உறுதி செய்வதற்கான அதிகாரச் சட்ட வரைவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அது தொடர்பாக அறிக்கை ஒன்றை குழுவிற்குச் சமர்ப்பித்தல். |
| (iii) | 07, 08 | ஒளிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளலும் அதனை உருவாக்கலும், தொழில்நுட்பத்தை அறிமுகஞ் செய்தலும் செயல் முன்னேற்றம் தொடர்பாக குழுவிற்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தலும். |
| (iv) | 10 | இலங்கை ஒப்புளி தொழில்நுட்பத்திலிருந்து இலக்க தொழில்நுட்பத்திற்கு மாறுவதற்கு ஜேர்மன் தொழில்நுட்பமாகிய DVB - T2 ஐப் |

பயன்படுத்துவதா அல்லது ஜப்பானிய தொழில்நுட்பமாகிய ISDB - T2 தொழில்நுட்பமா என்பதற்கான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் போதும் அதனை இனங் காண்பதற்கு முன்னரும் தற்போது அநேக நாடுகள் பயன்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் அத்தொழில்நுட்ப உபகரணங்களுக்குச் செலவாகும் கிரயமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென்றும் அத்தீர்மானத்தின் பொருட்டு பொது மக்களின் கருத்துகளைக் கவனத்திலெடுத்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்த போதும், நிதி, திட்டமிடல் அமைச்சர் சமர்ப்பித்த 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் ஏறக்குறைய 2014 செப்டம்பர் 05 ஆந் திகதியளவில் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய முகவர் நிலையத்துடன் (JICA) ரூபா 17.396 மில்லியன் உடன்படிக்கையில் ஈடுபட்டு ஜப்பானிய தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டமும் 2015 செப்டம்பர் மாதமளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(v) 12 அரசாங்க நிதி தவறுதலாகத் தனியாரைச் சென்றடைவதைத் தடுக்குமுகமாக தனியார் வானொலி அலைவரிசைகள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் என்பவற்றிற்கான அனுமதிப்பத்திரங்களை உடையவர்களது நடவடிக்கைகளைக் கண்காணித்தல், வருடாந்தம் கட்டணத்தை அறவிடுதல் மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கான முறையான நடைமுறைகளை ஏற்படுத்துதல்.

| | | | |
|---|---|---|---|
| (vi) | 13 | | அனுமதிப்பதிரங்களை உடையவர்களது சரியான தகவல்களைக் கம்பனிகள் பதிவாளரிடமிருந்து பெற்று குழுவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் மற்றும் கேபள் செய்மதி மற்றும் இணையதளம் என்பவற்றின் அடிப்படையிலான தொலைக்காட்சி நிறுவனங்கள் சம்பந்தமாகப் புதிய கொள்கைகளை ஏற்படுத்துதல். |
| (vii) | 15 | | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் |
| (viii) | 20 | (i) | 2010 ஆம் ஆண்டின் செலவினத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அமைச்சரவைக் திருத்தத்தை சமர்ப்பித்தல் |
| | | (ii) | இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அறவிடப்படும் வரி வருமானத்திற்குத் தாமதமின்றி நிதியம் ஒன்றை உருவாக்குதல் |
| (ix) | 26 | | தேசிய ஊடகத்துறை கொள்கையொன்றை உருவாக்குதலும் தொலைக்காட்சிப் பிரசார விளம்பரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான தேவை கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும். |

**3.16 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊடகத்துறை மற்றும் தகவல் அமைச்சிற்கு 2 அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து 2010, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட 13 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 6,217,843 சம்பளமாகவும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாகவும் ரூபா 2,567,008 அக் கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்டிருந்த போதும், அவர்கள் இணைக்கப்பட்ட பிரிவு வேலைக்குச் சமுகமளிப்பதை உறுதிப்படுத்தல், மேலதிக நேர வேலையில் ஈடுபட்டமையை உறுதிசெய்தல் போன்ற எதனையும் அமைச்சு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க தவறியிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் கேபள் தொலைக்காட்சிக்கென அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற ஒரு நிறுவனம் சட்டவிரோதமாக நடந்துகொண்டதாக 2013 ஆம் ஆண்டில் உறுதியானபோதும், அந்நிறுவனத்திற்கெதிராக அமைச்சு பரிசீலனை எதனையும் மேற்கொள்ளவோ அல்லது நடவடிக்கைகளை எடுக்கவோ இல்லை. மேலும், பொதுக் கணக்குக் குழுக் கட்டளைப் பிரகாரம் கேபள் செய்மதி மற்றும் இணையதள அடிப்படையிலான தொலைக்காட்சி நிறுவனங்கள் சம்பந்தமாக புதிய கொள்கை ஒன்றை உருவாக்காது 2014 நவெம்பரில் செய்மதித் தொழில்நுட்பத்தினூடாகத் தொலைக்காட்சி இணையதளம் ஒன்றை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தது.

(இ) ரன்மிஹிதென்ன திரைப்படக் கிராமத்தில் அச்சிடப்பட்ட நுழைவுச்சீட்டுக்கள் தொடர் இலக்கப்படி அமையாததுடன், பாதுகாப்பிற்கென வெளியிலிருந்து சேவைக்கமர்த்தப்பட்டிருந்தவர்களிடம் நுழைவுச் சீட்டு விற்பனை கையளிக்கப்பட்டிருந்ததுடன் நுழைவுச் சீட்டுக்களை வழங்குதலும் பின்னர் அவற்றைத் திருப்பிப் பெற்றுக்கொள்வதும் தொடர்பாக அமைச்சின் உத்தியோகத்தர்களால் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, ரூபா 50 ஆன நுழைவுச்சீட்டுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வழங்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட நுழைவுச்சீட்டுக்களது இலக்கங்கள் இணக்கஞ் செய்யப்பட்ட போது ரூபா 3,739,550 பெறுமதியான 74,791 நுழைவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டதா அல்லது பயன்படுத்தப்பட முடியாது போனதா என்பது பற்றி அமைச்சிற்கு அறிவிக்கப்படாதுமிருந்தது. அது தொடர்பாக அமைச்சு விளக்கம் எதனையும் கோரியிருக்கவுமில்லை. மேலும், 2014 ஒக்டோபர், நவெம்பர், டிசெம்பர் மாதங்களில் நுழைவுச்சீட்டுக்களது வருமானம் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக்களது இலக்கங்கள் அறிவிக்கப்படாததன் காரணமாக, அவ்வருமானம் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

## 3.17 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 17 | 14 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 | - |
| (iii) | இரண்டாந்தர நிலை | 101 | 78 | 23 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 34 | 31 | 03 | - |
| (v) | பிற (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 154 | 125 | 30 | 01 |

### (ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனிதவளம்

பிற தரப்பினரிடமிருந்து அமைச்சு பெற்றிருந்த மனிதவளம் தொடர்பாகப் புலனாகிய விடயங்கள் பின்வருமாறு.

| ஊழியர் வகை | பதவி | எண்ணிக்கை | பெற்றுக் கொண்ட தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை | சாரதிகள் | 02 | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 2010.08.02 முதல் இற்றை வரை |
| -மேற்படி- | சாரதி | 01 | -மேற்படி- | 2011.10.03 முதல் இற்றைவரை |
| -மேற்படி- | சிற்றூழியர்கள் | 02 | -மேற்படி- | 2010.08.02 முதல் இற்றைவரை |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை | தயாரிப்பு உதவியாளர் | 01 | அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | 2010.12.01 முதல் இற்றை வரை |
| -மேற்படி- | தொழிலாளி (ஒப்பந்தம்) | 01 | -மேற்படி- | 2011.07.11 முதல் இற்றைவரை |
| -மேற்படி- | தொழிலாளி (ஒப்பந்தம்) | 01 | -மேற்படி- | 2012.08.13 முதல் இற்றைவரை |
| -மேற்படி- | அச்சிடல் உதவியாளர் (ஒப்பந்தம்) | 01 | -மேற்படி- | 2013.06.03 முதல் இற்றைவரை |
| -மேற்படி- | பாதுகாப்புக் காப்பாளர் (ஒப்பந்தம்) | 01 | -மேற்படி- | 2012.08.01 முதல் இற்றைவரை |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்தம்) | 01 | -மேற்படி- | 2011.06.22 முதல் இற்றை வரை |
| | | 01 | -மேற்படி- | 2011.12.16 முதல் இற்றைவரை |
| | | 01 | -மேற்படி- | 2011.12.16 முதல் இற்றைவரை |

## 4. தலைப்பு 210 - தகவல் திணைக்களம்

---

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

---

திணைக்களம் கீழே காணப்படும் சில பதிவேடுகளைப் பேணியிருக்காததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை |
| உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்படவில்லை |
| மின்சார உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்படவில்லை |
| பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை |
| வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்படவில்லை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்படவில்லை |
| பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) | நாளதுவரையாக்கப்படவில்லை |
| இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்படவில்லை |

### 4.2 கணக்காய்விற்கான சான்று சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 14 ஊடகக் கலந்துரையாடல்கள், 11 கருத்தரங்குகள், 3 செயலமர்வுகள் நடாத்தப்பட்டமை தொடர்பான செலவினத்தை உறுதி செய்வதற்குத் தேவையான சான்றுகள் திணைக்களத்தில் இல்லாமையால் ரூபா 5,067,566

கூட்டுத் தொகையுடைய 28 கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது ஊடகவியலாளர்களது போக்குவரத்திற்கு ரூபா 1,560,532 செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஒவ்வொரு ஊடகச் சுற்றுலா தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு, ஊடகச் சுற்றுலாவில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களது தகவல்கள், வருகையை உறுதிசெய்வதற்கான கையெழுத்திடப்பட்ட பதிவேடுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அச் செலவினம் தொடர்பாகக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(இ) திணைக்களத்தின் திரைப்படப் பிரிவினால் 2014 ஆம் ஆண்டின்போது மேற்கொண்ட நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை

## 4.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

திணைக்களத்திற்கு முன்னைய ஆண்டின்போது வழங்கிய 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்படாததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 2,309,772 ஆகவுமிருந்தது.

## 4.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு விலகல்

18 செலவின விடயங்களுக்கு ரூபா 3,858,429 மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதால், ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதத்துக்கும் 100 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாக இருந்தது.

## 4.5 கட்டுநிதிக் கணக்கு

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு நிறைவேற்றுதர உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய அதிகூடிய செயல்நிமித்த கட்டுநிதியின் வரம்பானது திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின்படி ரூபா 60,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தபோதும், 04 சந்தர்ப்பங்களில் அவ்வரம்பையும் மீறி இருவருக்கு செயல்நிமித்த கட்டுநிதியாக ரூபா 455,000 வழங்கப்பட்டிருந்தது.

**4.6 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு பணிகளுக்காக 14 வெவ்வேறுஅமைச்சுக்கள்/ திணைக்களங்களால் வழங்கப்பட்ட ரூபா 2,494,149 குறித்த பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாது அப்பணம் வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) கட்டிட நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் தொடர்பாக 03 ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 7,488,592 ஆன தடுத்து வைத்த பணமும் தளபாடங்களையும் உகரணங்களையும் வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்திற்குரிய ரூபா 886,080 தடுத்து வைத்த பணமும் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தங்களுக்கு அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,640,157 தொகையை அறவிடப்படுவதற்கு இதனைப் பயன்படுத்தலாம் என 2013 ஆம் ஆண்டில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும், 2015 ஜுன் வரை அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இலக்கம் 21001, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 265,772 ஆகும். அந்நிலுவை மீதிகள் 9 மாதங்கள் தொடக்கம் 17 ஆண்டுகள் வரையிலானவையாகும். எனினும், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதிலான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

**4.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.8.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கை

திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் திட்டமானது செயலாற்றல் அறிக்கையுடன் நிதிச் செயல் முன்னேற்றத்தை ஒப்பிட்டுப்பார்க்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

### 4.8.2 வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் 2014 சனவரி 09 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த போதும், அமைச்சு அதனை அங்கீகரித்திருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலான ரூபா 7,237,370 தொகையான 03 கொள்வனவுகள் அக் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.8.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களம் உள்ளகக் கணக்காய்வுக் பிரிவு ஒன்றை தாபித்திருந்த போதிலும் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் பிரிவினால் திணைக்களக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின்போது 13 உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும், அக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 ஜூலை 30 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படவில்லை.

### 4.8.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் இரு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 4.9 சொத்து முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டன.

(i) முறைப்படி சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளாது நூற்றுக்கு 2.1 சதவீத வட்டி அடிப்படையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதியன்று வழங்குநருக்கும் தகவல் திணைக்களத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம், பிரான்ஸ் அரசாங்கக் கடனுதவியின் கீழ் 9,150,000 பிரான்ஸ் பிராங்க் (1,442,601 யூரோவிற்குச் சமமான ரூபா 102.2 மில்லியன்) செலவில் 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இயந்திரம் 2015 ஜூலை வரை பயன்படுத்தப்படாதும் முறையான பராமரிப்பு இல்லாமலும் இருந்தது. இச்சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் பரிந்துரைகமைய பிரசித்த கூறு விலைகளைக் கோருவதன் மூலம் விற்பனை செய்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும் அவ்வாறு நடைபெறவில்லை.

04 பிரிவுகளாகப் பெறப்பட்ட மேற்படி கடனுக்கு 2013 ஜூலை 25 இல் உள்ளவாறு கடன் தொகையில் 404,590 யூரோ கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பொருட்டு 308,352 யூரோ வட்டியாகச் செலுத்தப்பட்டுமிருந்தது. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வட்டி வீதம் 2.1 சதவீதமே ஆயினும் அதற்கு அப்பால் 2000029 மற்றும் 2000061 ஆகிய இரு வகைக் கடன்களுக்கு நூற்றுக்கு 6.13 சதவீதப்படி 2013 ஜூலை மாதமளவில் 172,295 யூரோ அதிகப்படியான வட்டி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. (வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம்) அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 1,048,391 இழப்புக்கள் தொடர்பில் பொறுப்பானவர்களை இனங்காண்பதற்கு 2015 ஜூலை மாதமளவிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ii) திணைக்களத்தின் கீழுள்ள அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தின் விற்பனை பட்டியல்களைத் தயாரித்தல் வாடிக்கையாளர்கள் கையிருப்பை இனங்காணப்பதற்கு வசதியளித்தல், கையிருப்பைப் பதிவு செய்தல் தொடர்பான கணனி மென் அணி ஒன்றை ரூபா 600,000 செலுத்தி 2008 ஆம் ஆண்டின்போது அறிமுகஞ் செய்த போதும், விற்பனை பட்டியல்களை தயாரிப்பதைத் தவிர வேறு பணிகளுக்கு இக்கணனி மென் பொருள் 2015 ஜூலை 30 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்தல்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2015 மே 31 ஆந் திகதியளவிலும் திணைக்களம் அவ்வறிக்கைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கவில்லை. 2013 ஆம் அண்டின் பொருட்டே இறுதி வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மேலதிகம், குறைவுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் சம்பந்தமாக 2015 ஜூலை 30 ஆந் திகதியளவிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

----------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஓராண்டிற்கும் குறைவாகத் திணைக்களத்தால் தீர்த்து வைக்கப்படாதிருந்த பொறுப்புகள் ரூபா 10,689,225 ஆகும். அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவினப் பேரேட்டில் பொறுப்புகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதியேற்பாடு எல்லைகளுக்கு அதிகமாக மூலதன மற்றும் மீண்டுவரும் செலவின விடயங்கள் 03 மற்றும் 08 இல் முறையே ரூபா 2,025,677 மற்றும் ரூபா 4,741,777 கடப்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

(iii) தனியார் நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யவிருந்த பொறுப்பாகிய ரூபா 35,000 ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்பின் கீழ் காட்டப்படவில்லை.

## 4.10 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பான | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) XXXII அத்தியாயத்தின் 2:3:4 ஆம் பிரிவு மற்றும் 1989 சனவரி 05 ஆந் திகதிய 01/89 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மேல் மாகாண சபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், அதற்கான லீவு அங்கீகரிக்கப்படவோ அல்லது விடுவிக்கப்படவோ அல்லாது 2014 மார்ச் 30 ஆந் திகதியின் பின்னர் அவர் சேவைக்குச் சமூகமளித்திருக்கவில்லை. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 104(1) | 2014 ஆம் ஆண்டில் 2 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக பரிசீலனை நடாத்தப்படவில்லை. |

## 4.11 செயலாற்றல்

2014 வருடாந்த வரவு, செலவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) போதியளவு நிறைவேறாத பிரதான பணிகள்

---

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவு நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

விசேட தேசிய முக்கியத்துவ சந்தர்ப்பங்களின்போது (இலங்கையின் முதலாவது சுதந்திர தின வைபவம் போன்றன) அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்திட்டங்கள் தொடர்பாகத் குநந்திரைப்படங்களையும் தயாரிக்கப்பட்ட அறிக்கை போன்றமைந்த நிகழ்ச்சிகளையும் பாதுகாப்பது திணைக்களத்தின் பிரதான பணியாகும். திரைப்படப் பாதுகாப்பகத்தை நவீனமயப்படுத்துமாறு அநேக ஆண்டுகளாக அப்பிரிவில் உள்ள உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தும், 2014 ஆம் ஆண்டிலேனும் அது ஆரம்பிக்கப்படவில்லை. முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய இப்பணியை நிறைவேற்றாமையின் காரணமாக, பாதுகாப்பு முறையாக அமையாமையும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களது சுகாதாரத்திற்கு பாதமாக தாக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் ஆய்வுகூடத்திற்கு உசிதமான குளிரூட்டி பொருத்தப்படாமையால் இரசாயனத் தாக்கங்களால் குளிரூட்டி அடிக்கடி செயலற்றுப் போவதாகவும் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) திட்டமிடல்

---

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 93 செயல் நடவடிக்கைகளில் 10 மீளாய்வாண்டின்போது ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானதாக இல்லாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 93 செயல் நடவடிக்கைகளில் 13 உள்ளடங்கலான மாதிரிகள் பரிசீலனைக்குள்ளானபோது ஒவ்வொரு பிரிவிலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டும் பெறப்பட்ட தகவல் ஒப்பிடப்பட்டுப் பார்க்குமிடத்து 8 பிரிவுகளது தகவல்கள் தவறானவை என்பது புலனாகியது.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒலிப் பிரிவைப் பழுதுபார்க்கும் பணியானது நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், 2015 ஜூலை 30 ஆந் திகதியளவில் மொத்தப் கொள்வனவுப் பெறுமதியில் 20 சதவீதம் மாத்திரமே முடிவடைந்திருந்தன.

## 4.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து விலகல்**

---

ஆண்டு முழுவதற்குமான உணவுக் கொள்வனவு மற்றும் வாகனங்களை வாடகைக்குப் பெறுதல் ஆகிய இரு ஒப்பந்தங்களுக்கு திறந்த அறிவித்தல்களின் மூலம் வழங்குநர்களைப் பதிவு செய்யவேண்டிய போதும், திணைக்களம் அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்கு முரணாக சில தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மூலம் கூறு விலைகளைக் கோரியிருந்தது. அவ்வாறாகப் பெறப்பட்ட கூறு விலைகளின் பிரகாரம் ஒவ்வொரு பணிக்கும் ஒவ்வொரு வழங்குநர் மாத்திரம் எனத் தெரிவு செய்யப்பட்டு, அவர்களைப் பதிவு செய்து, ஆண்டு முழுவதும் அந்த இரு வழங்குநர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட கொள்வனவுகளையம் சேவைகளையும் பூர்த்தி செய்து அதன் பொருட்டு ரூபா 6,351,661 செலவிடப்பட்டிருந்தது.

## 4.13 நிதி மோசடி போன்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் வருமாறு.

(அ) திணைக்களம் மீளாய்வாண்டில் ஊடகக் கலந்துரையாடல் மற்றும் ஏனைய விசேட சந்தர்ப்பங்களின்போது சிற்றுண்டிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை வழங்குகையில் சேவைக் கட்டணத்தைக் கருத்திற்கொள்ளாது மதிப்பாய்வை மேற்கொண்டு ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்திருந்தது. பின்னர், 2013 ஆம் ஆண்டின்போது 40 சதவீதம் 2014 ஆம் ஆண்டின்போது 50 சதவீதம் என சேவைக் கட்டணத்தையும் சேர்த்துக் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது. இதன் காரணமாக, 2013 சனவரி முதல் 2014 ஒக்டோபர் வரை ரூபா 5,400,534 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 மே 28 ஆந் திகதியன்று சேவைக் கட்டணத்தை நூற்றுக்கு 10 சதவீதமாகக் குறைப்பதென அவர்களே இணங்கியதற்கமைய சேவைக் கட்டணமாக மேற்படி காலப்பகுதியின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,557,755

கொடுப்பனவில் ரூபா 1,173,476 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையாக அமைந்தது.

(ஆ) புதிய ஊடக நிலையத்திற்கு மின்சாரம் வழங்கும் பிரதான மின்சார வயர்களைப் பொருத்துவதற்குத் தேவையான கேபள்களை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் விசேட கட்டளை ஒன்றின் மூலம் பெற்று, உசாத்துணைக் கம்பனியின் சிபார்சுக்கமைய அது வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கட்டளையோ அல்லது கொள்வனவுக்கான பட்டியல்களோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. சந்தை விலையிலும் அதிகமாக, அதாவது ஒரு மீட்டர் ரூபா 26,723 வீதம் 394 மீட்டருக்கு ரூபா 10,528,862 ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்குப் புறம்பாக 2014 ஜூன் 06 ஆந் திகதியன்று மின்சார சபையின் நிபுணத்துவர்களின் சேவையைப் பெற்று ஒப்பந்தகாரருடன் இந்த மின்சார வயர்களின் உள்ளவாறான நீளத்தை அளவிட்டபோது 74 மீற்றர்களிற்கு ரூபா 1,977,502 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தமை உறுதியாயிற்று. எவ்வாறாயினும், 2015 ஜூலை 30 ஆந் திகதியளவிலும் கூடுதலாக வழங்கிய தொகையை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவது சர்ச்சைக்குள்ளாகியிருந்தது.

(இ) திணைக்களத்தின் ஊடக அரங்கில் பானங்களை விற்பனை செய்யும் கூடம் ஒன்றை நடாத்துவது தொடர்பாக வெளி நபர் ஒருவரிடமிருந்து ரூபா 4,653,513 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதனை அறவிடுவதற்கு திணைக்களத்தால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2014 பெப்ரவரி மாதத்தில் சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் சட்ட மா அதிபரது அழைப்பிற்கும் திணைக்களம் அனுசரணையாக நடந்து கொள்ளவில்லை. அவ்வெளி நபரிடம் தகவல் பணிப்பாளரது பெயரில் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்ட 2015 சனவரி 02 ஆந் திகதிய தகவல் துறைப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அம் மதுபான விற்பனைச்சாலை கொழும்பில் வெளி நபர் ஒருவரால் குத்தகைக்குப் பெறப்பட்டிருந்த கட்டிடம் ஒன்றில் இயங்குவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2015 ஜூலை 30 ஆந் திகதியளவிலும், அறவிடப்பட வேண்டிய தொகை சம்பந்தமாக சட்டமா அதிபரால் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டவாறிருக்கும் தறுணத்தில் அந்நபருக்கு உடன்படிக்கை எதுவுமில்லாதும் பணம் எதுவும் அறவிடப்படாமலும் மதுபான அனுமதிப்பத்திரத்தை வழங்கியமை மோசடிச் செயலாகும் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.14 இழப்புகளும் நட்டங்களும்

---

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தை ரூபா 200,763,112 மதிப்பீட்டுப் பெறுமதியில் நிர்மாணிப்பதற்குத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூபா 196,080,674 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 6,623,624 கூடுதலாக வழங்கப்பட்டதாக கொடுப்பனவைச் சான்றுறுதிப்படுத்திய உசாத்துணைக் கம்பனி ஏற்றுக் கொண்டபோதும், அதனைக் குறித்த ஒப்பந்தகாரருக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு அல்லது கூடுதலாக வழங்கிய தொகையை ஒப்பந்தகாரரிடமிருந்து மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) புதிய ஊடக நிலையத்தில் 700m$^2$ பரப்பளவில் அமைந்த கேட்போர் கூடம் நியமங்களுக்கு அப்பாற்பட்டவாறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. உசாத்துணைக் கம்பனியால் 2011 நவெம்பர் 02 ஆந் திகதி கட்டிடம் பொறுப்பேற்கப்பட்டு 6 மாதங்கள் கழிவதற்கு முன்னரே வெளியாகிய குறைபாடுகள் 2013 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், அக் குறைபாடுகள் 2015 ஜுலை 30 ஆந் திகதியளவிலும் நிவர்த்தி செய்யப்படாதிருந்தன.

(இ) கொழும்பு மாநகர சபையிடமிருந்தும் தீயணைப்பு உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படாமல் முறையான நியமத்திற்கமையாதும் புதிய கட்டிடத்தில் அமைக்கப்பட்ட தீயிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கான 04 கதவுகளுக்கு உசாத்துணை நிறுவனத்தின் சிபார்சுக்கமைய ஒப்பந்தகாரருக்கு ரூபா 410,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், 2015 ஜுலை 30 ஆந் திகதியளவிலும் நியமங்களுக்கேற்ப அக்கதவுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊடகவியலாளர்களைக் கொண்டு செல்வதற்கு வாடகை அடிப்படையில் பஸ் வண்டிகளைப் பெறுவதை மதிப்பாய்வு செய்கையில் குறுந்தூரப் பயணத்திற்கான கிலோமீற்றர் கட்டணத்தை மதிப்பாய்வு செய்வதற்குப் பதிலாக 150 கிலோமீற்றருக்குக் கொடுப்பனவு செய்வதற்கு உடன்பட்டமையால் 150 கிலோ மீற்றர்களுக்குக் குறைவாகப் பயணஞ் செய்த 15 பயணங்களது கூட்டுத்தொகை 645 கிலோ மீட்டராகியிருந்தது. கொடுப்பனவு செய்யப்படும்போது ஒரு பயணத்திற்கு ஆகக் குறைந்த 150

கிலோமீட்டர் வீதம் 2250 கிலோ மீட்டருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 177,620 இழப்பு ஏற்பட்டிருந்தது.

### 4.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது புலனாகிய சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் வருமாறு.

(அ) யுத்தச் சூழலின்போது நாட்டின் பாதுகாப்பு நிலையின் அடிப்படையில் சனாதிபதி சமூகமளிக்கும் கூட்டங்களுக்குச் சகல ஊடகங்களது ஊடகவியலாளர்களுக்கும் போக்குவரத்து தங்குமிட வசதி, உணவு என்பன திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்தது. எனினும் யுத்த சூழ் நிலையற்ற தற்போதும் ஊடகவியலாளருக்கு அவ்வசதிகளை வழங்கியமைக்கும் போக்குவரத்திற்கும் ரூபா 918,360 மற்றும் அவர்களது தங்குமிட வசதி, உணவு என்பவற்றிற்கு ரூபா 642,172 என மொத்தமாக ரூபா 1,560,532 மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஊடக நிலையத்திற்குத் தளபாடங்களை வழங்கும் ஒப்பந்தம் சம்பந்தமாகக் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளில் கூடுதலாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,184,700 தொகையில் ரூபா 1,037,200 நிறுத்தி வைத்த பணத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படுமென 2014 சனவரி 31 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட ஏனைய குறைபாடுகள் அதாவது துருப்பிடித்தல் மாதிரிகளுக்கமையாது தோற்பொருட்களைப் பயன்படுத்துதல் போன்ற நலிவுகளைத் திருத்துவதற்கு 2015 ஜுலை 30 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.16 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக திணைக்களம் 2015 ஜுலை 30 ஆந் திகதியளவிலும் திருத்தங்களை மேற்கொண்டிராத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012 | 4 அ | புதிய ஊடக நிலையத்திற்குத் தளபாடங்கள் வழங்குவது சம்பந்தமாக உசாத்துணைக் கம்பனியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கணக்காய்வு பரிசோதனையின்போது புலனாகியவாறு உடன்பட்ட நியமங்களுக்கும் மாதிரிகளுக்கும் புறம்பாக 12 விடயங்களுக்கு ரூபா 3,522,700 கொடுப்பனவும் உடன்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக ரூபா 2,568,800 பெறுமதியில் வழங்கப்பட்ட 03 வகைப்பொருட்களும் பயன்படுத்தப்பட முடியாதனவாக இருப்பது சம்பந்தமான நடவடிக்கை. |
| 2012 | 7(ஆ,ஆ)(i) | புதிய ஊடக நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 200,763,112 தொகையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்காக எழுத்து மூலம் கோரப்பட்ட உப ஒப்பந்தப் பதிவேடு, உத்தரவாதச் சான்றிதழ் (மின்சார உபகரணங்கள், குளிரூட்டிகள், தீயிலிருந்து பாதுகாப்பதற்கான கதவுகள்) சகல கேள்விதாரர்களதும் கூறுவிலை ஆவணங்கள், பழைய கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கான உடன்படிக்கை போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. |
| 2012 | 7(ஆ,ஆ)(ii) | புதிய ஊடக நிலையத்திற்கு ரூபா 23,997,597 செலவில் தனியார் கம்பனி ஒன்றிலிருந்து தளபாடங்களைக் கொள்வனவு செய்கையில் அக் கம்பனியிடமிருந்து கூறு விலைகளைக் கோரியமைக்கான மூலப்பிரதிகள் அல்லது அவற்றின் இணைப் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

## 4.17 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆராய்ச்சிப் பாடங்களைக் கற்ற மூன்று பட்டதாரி உத்தியோகத்தர்கள் அடங்கலாக 07 உத்தியோகத்தர்கள் சேவையிலமர்த்தப்பட்டு விசேட ஆராய்ச்சிக்கூறு ஒன்று 2012 ஆம் அண்டு முதல் திணைக்களத்தில் நிறுவப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, 2014 மார்ச் 17 ஆந் திகதியன்று இரண்டு களப் பரிசீலனைகளுக்கு வெளியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 3,380,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அப் பரிசீலனைக்கு நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான கூறு விலைகளைக் கோரும்போதும் அவற்றை மதிப்பாய்வு செய்யும்போதும் ஆராய்ச்சியாளர்களது தகைமைகளும் நிறுவனத்தின் முன்னைய தகைமைகளும் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்படி களப் பரிசீலனை அறிக்கை 2014 ஏப்ரல் மாதம் பெறப்பட்டபோதும் அது திணைக்களத்தின் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் பெறுபேறு பெறப்பட்டதாக அல்லது அது தொடர்பாக மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டமை என்பன கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

## 4.18 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 15 | 08 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 06 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 236 | 180 | 56 |
| (iv) | ஆரம்ப நிலை | 51 | 47 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | ஏனையவை (சமயாசமய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 21 | 10 | 11 |
| | | -------- | ------- | ------ |
| | மொத்தம் | 339 | 251 | 88 |
| | | ==== | === | === |

(ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனிதவளம்

திணைக்களம் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனிதவளம் சம்பந்தமாகப் புலனாகிய விடயங்கள் பின்வருமாறு.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | யாரிடமிருந்து பெறப்பட்டது என்பது | காலப்பகுதி |
|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 02 | களணிப் பல்கலைக்கழகம் | 2010.05.07 முதல் 2014.12.31 வரை |
| | | ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 2010.08.01 முதல் 2014.12.31 வரை |

## 5. தலைப்பு 211 - அரசாங்க அச்சகம்

### 5.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களம் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் 20.03.02.05 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழான அச்சக வருமானக் கணக்கைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்க வேண்டுமாயினும், அக் கணக்குகள் 1 ½ மாத தாமதத்தின் பின்னர் 2015 மே 18 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

திணைக்களம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐ/ஏ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (iv) | மின்சார உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (v) | இழப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (vi) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (vii) | வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| (viii) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09(1) ஆம் பந்தி |
| (ix) | தொழில்நுட்ப மதிப்பாய்வாளரின் வருகையைக் குறிக்கும் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் |
| (x) | தொழில்நுட்பக் குழுக் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டல் |

## 5.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

மீளாய்வாண்டின்போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 4 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்படாததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 164,264,838 ஆகும்.

## 5.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடமொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியாகிய ரூபா 500,000 எஞ்சியிருந்தது.

(ஆ) 08 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 16 முதல் 94 சதவீதம் வரையிலானதாக அமைந்திருந்தது.

## 5.5 கட்டு நிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி முடிவுற்றவுடனேயே செயல்நிமித்த கட்டு நிதி தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 120,210 கூட்டுத் தொகையுடைய செயல்நிமித்த கட்டு நிதியைத் தீர்த்து வைப்பதில் 1 முதல் 4 மாத கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஒரு நிறைவேற்றுதர உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய அதி கூடிய கட்டுநிதி 371 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி ரூபா 20,000 ஆகும். எனினும், அப் பிரமாணத்திற்கு முரணாக 11 சந்தர்ப்பங்களில் 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இற்கும் கூடுதலாக ரூபா 680,178 கூட்டுத் தொகை செயல்நிமித்த கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) முறையான அங்கீகாரமின்றி ரூபா 7,500 எல்லையை மீறி சில்லறைக்காசுக் கட்டு நிதியாக ரூபா 50,000 வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டைத் தீர்த்து வைப்பது தொடர்பாக 2014 நவெம்பர் 20 ஆந் திகதிய 04/2014 ஆம் இலக்கத் திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(i) மேற்படி சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத் தலைவரால் தனது அலுவலகத்தினதும் உப அலுவலகங்களினதும் கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்குப் பொறுப்பான நிறைவேற்று தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டு மீதி சம்பந்தமான குறிப்பு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, வங்கியிலிருந்து வரவு அறிவித்தல் பெறப்பட்டு அது திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு 2015 ஜுலை 30 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகளைக் கடந்து விட்ட ரூபா 7,092,740 கூட்டுத் தொகையுடைய 26 வைப்புகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கோட்டே மாநகரசபை அச்சிடற் பணிகளுக்காக வழங்கிய ரூபா 2,050,000 தொகைக்கு குறித்த பணியை நிறைவேற்றாமல் வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது.

### 5.7 வருமானக் கணக்கு

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் எனும் ரீதியில் அரசாங்க அச்சகருக்கு 20.03.02.05 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் சேவைக் கட்டணம் - அரசாங்க அச்சக வருமானம் என்பவற்றை மதிப்பீடுசெய்தல், வருமானத்தைச்

சேகரித்தல், கணக்கிலிடல் கணக்குகளைச் சமர்ப்பித்தல் எனும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 650,264,550 கூட்டுத் தொகையுடைய வருமானம் நிலுவையாக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 1 முதல் 26 ஆண்டுகள் வரையிலானவை. வருமான நிலுவையை அறவிடுவதில் மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்றிருந்தன.

(ii) 17 ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 138,288,612 கடன் நிலுவை மீதிகளில் எதுவுமே 2014 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. 7 ஆண்டு காலத்திற்கான ரூபா 114,713,546 கடன் நிலுவை மீதியில் 2014 ஆம் ஆண்டு 26 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 5.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

---

விடய இலக்கம் 21101, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த நிலுவை மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 6,164,028 ஆகும். அந் நிலுவை மீதிகள் 3 முதல் 5 ஆண்டுகளாக இருந்து வருவனவாகும். அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையிலிருந்தன.

(ஆ) மரணமடைந்த, ஓய்வுபெற்ற, ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடமாற்றமாகியவர்களது நீண்ட காலக் கடன் மீதி ரூபா 597,818 ஆகும்.

## 5.9 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 5.9.1 வருடாந்தப் பொருட் கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சமர்பிக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும் அது 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.9.2 உள்ளகக் கணக்காய்வு

---

அரசாங்க அச்சகத் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வுக் பிரிவு ஒன்றை நிறுவியிருந்த போதும், திணைக்களப் பணிகளைக் கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

### 5.9.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

---

2009 ஜுன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம், சகல கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களும் குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறை கூட்டத்தை நடாத்த வேண்டுமாயினும், அரசாங்க அச்சகத் திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் 02 குழுக் கூட்டங்களை மாத்திரமே நடாத்தியிருந்தது.

### 5.9.4 சொத்து முகாமைத்துவம்

---

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது புலனாகியது.

| சொத்து வகை | கூறின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| இயந்திர சாதனங்கள் - | | |
| Kord 06 | 01 | 15 ஆண்டுகளுக்கு மேல் |
| Mozp | 01 | 02 ஆண்டுகளுக்கு மேல் |

(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அவ்வறிக்கைகள் 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வறிக்கைகள் திணைக்களத்தால் 2015 மே 31 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டின் பொருட்டே நடாத்தப்பட்டிருந்தது. அவ்வறிக்கைகள் 2015 ஜுலை 20 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) முன்னைய, ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மேலதிகம், குறைவுகள் மற்றும் ஏனைய சிபார்சுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.10 இணங்காமை

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| VII ஆம் அத்தியாயத்தின் 12.2.5 ஆம் பிரிவு | 316,000 | அச்சகத் திணைக்களத்தின் உதவி அரசாங்க அச்சகர் பதவிக்கான பதில் கடமைகளை நிறைவேற்றுதவற்கு 18 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது உற்பத்தி நிலைமையை அதிகரிப்பதற்கான படி வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) இலங்கை சனநயாக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| • நிதிப்பிரமாணம் 104(1) மற்றும் (3) | 3,181,868 | மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட 10 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| • நிதிப்பிரமதணம் 104(4) | 3,443,642 | 2002, 2007, 2012 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 3 வாகன விபத்துக்களுக்கான பூரண அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு 1 முதல் 12 வருடங்கள் கழிந்திருந்தன. 2012, 2014 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 5 வாகன விபத்துக்கள் தொடர்பான பூரண அறிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2015 மே மாதமளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| • நிதிப்பிரமாணம் 110 | 3,448,642 | மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட இழப்புகளும் நட்டங்களும் தொடர்பான தகவல்கள் இழப்புகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு அப்பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | • நிதிப்பிரமாணம் 1645(அ) | 6,586,592 | திணைக்களத்தின் வாகனக் குழாம் 14 வாகனங்களைக் கொண்டிருந்தது. அவற்றின் 2014 ஆம் ஆண்டிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தச் செயலாற்றல் பொழிப்புகளும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | • நிதிப்பிரமாணம் 1645(ஆ) | 3,473,638 | குறித்த பிரமாணத்தின்படி குழாமில் உள்ள மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களது சம்பவப் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) | 2008 ஜுன் 24 ஆந் திகதிய ஏ/பீ/06/71/02/01 ஆம் இலக்க திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கடிதம் | 929,402 | குறித்த கடிதத்தில் உள்ள அறிவுறுத்தலின் படி தனியார் துறையிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 ஆண்டுகளுக்கு மேலாக வருமதியாகவுள்ள கடன் மீதி ரூபா 929,402 ஆகும். |

(ஆ) வரித் தேவைகளுடன் இணங்காமை

---------------------------------------------------------------

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரை ஏனைய நிறுவனங்களது அச்சக நடவடிக்கைகளுக்கு அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியாகிய ரூபா 25,394,988 தொகையானது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கப் பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க திருத்த அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தது.

## 5.11 செயலாற்றல்

-------------------------

2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) திட்டமிடல்

---------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) திணைக்களத்தின் ஆற்றலை அதிகரிக்கும் நோக்குடன் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 281.35 மில்லியன் நிதியேற்பாடுடன் 12 உப பணிகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 277.15 மில்லியன் பெறுமதியான 10 பணிகளில் எதுவித நேரடி முன்னேற்றமும் எய்தப்பெறாததுடன் அதற்கென ரூபா 13.38 செலவிடப்பட்டுமிருந்தது.

(ii) மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மென் பொருள் அபிவிருத்திக்காக 4 உப பணிகளின் கீழ் ரூபா 7 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு கணனிகள் மற்றும் மென் பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் ஒரு உப பணி மாத்திரமே நிறைவடைந்திருந்தது. அதற்கான பொருட்டு திட்டமிடப்பட்ட அளவிலும் கூடுதலாக 21 கணனிகளும் மென் அணிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கான நிதித் தேவை ரூபா 11.36 மில்லியன் ஆகியமையால் ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 8.86 மில்லியனால் அதிகரித்திருந்தது.

## 5.12 வங்கிக் கணக்கைச் செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்

(அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதில் நீண்ட தாமதம்

வங்கிக் கணக்கொன்றினது 2015 மார்ச் முதல் ஜூன் வரையிலான வங்கிக் கணக்கிணக்கக்கூற்று 2015 ஜூலை 30 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட வில்லை.

(ஆ) சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதி

அரசாங்க அச்சகம் 2015 மே மாதத்திற்கெனத் தயாரித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் புலனாகிய குறைபாடுகள் பின்வருமாறு.

(i) இனங்காணப்படாத பெறுவனவுகள்

மூன்று ஆண்டுகளைக் கடந்து விட்ட ரூபா 116,681 கூட்டுத் தொகையுடைய இனங்காணப்படாத பெறுவனவுகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 5 ஆண்டுகளுக்கு அதிகமாக தொடர்ச்சியாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 101,288 ஆகும்.

(ii) வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ள காசோலைகள்

வழங்கப்பட்டு கொடுப்பனவிற்கு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ள ரூபா 573,320 பெறுமதியான காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(iii) வைப்பிலிடப்பட்டு, கணக்கில் செலவு வைக்கப்படாதுள்ள காசோலைகள்

-------------------------------------------------------------------------------------------------------------

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 மே வரை 8 சந்தர்ப்பங்களில் காசாக வைப்பிலிடப்பட்டுத் தேறாதிருந்த ரூபா 781,659 சர்ச்சைக்குரிய விடயமாகும்.

(iv) இனங்காணப்படாத கொடுப்பனவுகள்

----------------------------------------------------------------

03 ஆண்டுகளைக் கடந்துவிட்ட இனங்காணப்படாத ரூபா 138,887 கொடுப்பனவை இனங்கண்டு அதனைக் கணக்கிலிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**5.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**---------------------------------------------------------------**

**கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து விலகல்**

**------------------------------------------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 30 IP Camera Surveillance System கூறுகளது கொள்வனவு தொடர்பாகத் திணைக்கள மாதிரிகளுக்கு சாதகமாகவிருந்த மற்றும் ரூபா 6,933,920 ஆகிய அதி குறைந்த விலையைச் சமர்ப்பித்த கூறு விலையைப் புறக்கணிப்பதற்குத் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு சிபார்சு செய்திருந்தது. அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8.6 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொண்டதால் கூறு விலையின் பெறுமதி ரூபா 10,744,669 ஆகவிருந்த ஒப்பந்தத்தை வழங்கியதன் காரணமாக திணைக்களத்திற்கு ரூபா 810,745 இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 492,500 தொகைக்கு 10,000 கிலோகிறாம் Cotton Rags கொள்வனவு செய்யப்படும் போது 2014 மே 19 ஆந் திகதிய பொருட்கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தை மீறி திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர் பதிவேட்டில் உள்ளடங்காத வழங்குநர் ஒருவரிடமிருந்து கூறு விலை கோரப்பட்டு பொருட்டு கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.4.3(இ) வழிகாட்டலுக்கு முரணாக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 5.14 மனிதளவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 09 | 28 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 03 | 05 | - |
| (iii) | இரண்டாந்தர நிலை | 1,264 | 704 | 560 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 664 | 571 | 93 | - |
| (v) | ஏனையவை (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 1,973 | 1,288 | 686 | 01 |